# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.228/2022 P.W.6

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சின்னசாமி | த–பெ | நாகநாததுரை |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 64/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | சார்பு ஆய்வாளர் ஓய்வு | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.08.2025**

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து காவல் துறையில் பணியாற்றி தற்போது பணி ஓய்வில் உள்ளேன். இதற்கு முன்பு காரைக்குடி குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் நான் சார்பு ஆய்வாளராக 13.12.2013 அன்று 12.30 மணிக்கு நிலைய பணியில் இருந்தபோது கார்த்திக் என்பவர் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த புகாரைப்பெற்று நிலைய குற்ற எண். 474/2013 பிரிவுகள் 420, 506(2) ன் இதச பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ 6.** பின்னர் இந்த வழக்கு கோப்பை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.09.03 16:03:19 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.228/2022 P.W.5**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பன்னீர் செல்வம் | த–பெ | வேலு |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 47/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | தொழில் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.08.2025**
**எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

--------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து தொழில் செய்து வருகிறேன். எனக்கு ராஜ்குமார் என்பவரை தெரியும். ராஜ்குமார் என்பவரது உறவினர் கார்த்திக் என்பவர் சம்பவ சமயத்தில் மாதவி மற்றும் அஞ்சலி தேவி ஆகியோர்களிடம் 280000 ரூபாய் பணம் கொடுத்து வெளி நாட்டில் வேலை செய்வதற்காக கட்டியதாக தெரிந்து கொண்டேன். பின்னர் அவர்கள் அந்த பணத்தை அவரிடம் திரும்ப தரவில்லை என்றும் வெளிநாட்டில் வேலை வாங்கித்தரவில்லை என்றும் நான் தெரிந்து கொண்டேன். இது தொடர்பாக எனக்கு தெரிந்து ராஜ்குமார், கார்த்திக் என்பவர் கொடுத்த புகாருக்கு விசாரணைக்காக போலீசார் என்னை அழைத்தபோது மேற்படி விபரங்களை நான் அவரிடம் சொன்னேன்.

குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.09.03 16:03:24 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி